1995 மே 5]

(இ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. இராம. இராமநாதன், பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர்.

திரு. இராம. இராமநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் ஒப்புயர்வற்ற முதல்வராக விளங்கி, எங்களை எல்லாம் இன்றைக்கு ஆளாக்கி வழிநடத்தி எங்களை வாழவைத்துக்கொண்டிருக்கின்ற இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய பொன்னார் திருவடிகளிலே பணிந்து வணங்கி இன்றைக்கு சாதாரணமாக இருந்தவர்கள் இந்தக் குழுவினுடைய தலைவர் ஆக ஆக்கி மிகச்சிறந்த செயலாற்றுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு அவர்களுக்கு நன்றிகளைத் காணிக்கையாக்கி அவர்களுடைய பொற்பாதம் பணிந்து வணங்கி 1994–95 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் சார்பாக குழுவின் இருநூற்றி முப்பத்தி மூன்றாவது முதல் இருநூற்று நாற்பத்தொன்றாவது வரையிலான ஒன்பது அறிக்கைகளை இப்பேரவைக்கு அளிக்கின்றேன். வணக்கம்.

(ஈ) சட்ட விதிகள் ஆய்வுக் குழு

முற்பகல் 11–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் அறிக்கையை அளித்தல், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர், சட்ட விதிகள் ஆய்வுக்குழுத் தலைவர்.

மாண்புமிகு திரு. ச. காந்திராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் 1994–95 ஆம் ஆண்டிற்கான மேற்படி குழுவின் 15–வது அறிக்கையினை இந்த அவைக்கு அளிக்கிறேன்.

(உ) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திருமதி ஜீனத் சர்புதீன், பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் தலைவர்.